<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>
**<u>O.S. No. 87/2014</u>**

வா.சா.2 தேதி. 12.03.2026.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வமணி | | |
| க/பெ. | சிவபிரகாசம் | வயது | 84 |
| தொழில் | | கிராமம் | |
| தாலுக்கா | | | |

<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கினை யார் தாக்கல் செய்துள்ளார் என்றால் எனது மகளான கண்ணகி தான் தாக்கல் செய்துள்ளார். எந்த பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் பாகப்பிரிவினை கோரி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார். யார், யார் பெயரில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆனந்தன், அழகப்பன், தவமணி, செல்வமணி ஆகியோர் பெயர்களில் வழக்கு தாக்கல் செய்துள்ளார், மேற்படி வழக்கில் எத்தனை சொத்துக்கள் குறித்து தாக்கல் செய்துள்ளார் என்றால் மூன்று மாடி வீடுகள் குறித்து வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி சொத்துக்கள் தரங்கம்பாடி சாலையில் உள்ள கொத்தத்தெரு முகவரியில் உள்ளன. சொத்துக்கள் அனைத்தும் கோவில் இடமாகும். யார் பெயரில் கோவில் பகுதி உள்ளது என்றால் எனது கணவர் பெயரில் உள்ளது. கொத்தத்தெருவில் உள்ள வீடுகள் குறித்துதான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தின் வீட்டிற்கு பின்புறம் உள்ள ஷீட் போட்ட வீடு உள்ளது. அந்த வீடு கொத்தத்தெருவை சேர்ந்தது இல்லை, மாரியம்மன் கோவில் தெருவை சேர்ந்தது.

கொத்தத்தெருவில் உள்ள வீட்டினை ஆனந்தன் மற்றும் அழகப்பன் ஆகியோர்கள் எவ்வாறு பிரித்துக்கொண்டு அனுபவித்து வருகிறார்கள் என்றால் மேற்கு புறத்தை ஆனந்தனும், கிழக்கு புறத்தை அழகப்பனும் பிரித்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தின் கீழ் புறத்தில் உள்ள 2000 சதுரடி இடத்தில் பாஸ்கரன் வீடு கட்டியுள்ளாரா என்றால் சரியல்ல. அந்த வீட்டினை அழகப்பனும் பாஸ்கரனும் சேர்ந்து கட்டியுள்ளார்கள். மேற்படி குடும்ப சொத்தில் பாஸ்கரன் எவ்வாறு கட்டினார் என்று கேட்டீர்களா என்றால் நான் கேட்கவில்லை. எனது மகன்கள் என்னிடம் சண்டையிடுவார்கள் என்பதால் நான் கேட்கவில்லை. பின்புறத்தில் உள்ள வீட்டிற்கு கோவில் வரி மற்றும் வீட்டு வரி பாஸ்கரன் கட்டி வருகிறார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

எத்தனை வருடத்திற்கு முன்பு பாஸ்கரன் இந்த இடத்தில் வீடு கட்டினார் என்றால் மூன்று வருடத்திற்கு முன்பு கட்டினார். அழகப்பன் பகுதிக்கும் பாஸ்கரன் இடத்திற்கும் நடுவில் வேலி உள்ளது. அதனால் கொத்தத்தெருவிலிருந்து நேரடியாக பாஸ்கரன் இடத்திற்கு செல்ல முடியாது என்றால் சரிதான். பாஸ்கரன் அந்த இடத்தை அனுபவிப்பது பெரிய மாரியம்மன் கோவில் தெரு வழியாகத்தான் வந்து அனுபவிக்கிறார் என்றால் சரிதான். கீழ்புற பாதியில் முதல் தளத்தில் ஷெட் போட்டு அழகப்பன் தனது குடும்பத்துடன் வசித்து வருகிறார் என்றால் சரிதான். நான் தரைதளத்தில் ஒரு பாதியில் நான் வசித்து வருகிறேன் மற்றொரு பாதியில் அழகப்பன் வாடகைக்கு விட்டுள்ளார் என்றால் சரிதான். எனது கணவர் உயிருடன் இருக்கும்போது கீழ்புறத்தில் இரண்டு கடைகள் மட்டுமே இருந்தது. தற்போது அந்த கொத்தத்தெரு இடத்தில் நான்கு கடைகள் உள்ளது. ஆனந்தனுக்கு ஒதுக்கிய பாகத்தில் இரண்டு கடைகள் போட்டு உள்ளார். அந்த இண்டு கடைக்கும் இடையே நடைபாதை அமைத்து அதன் வழியாகத்தான் அவரது வீட்டிற்கு செல்லுமாறு ஆனந்தன் அமைத்துள்ளார் என்றால் சரிதான்.

ஏற்கனவே எனது கணவர் உயிருடன் இருந்தபோது அது மாடி கட்டிடமாக இருந்தது. வீட்டின் கூரை பழுதடைந்து போனதால் அதனை இடித்துவிட்டு புதிதாக ஆனந்தன் மேற்கூரை அமைத்தார் என்றால் சரியல்ல. எனது கணவர் உயிருடன் இருந்தபோது ஆனந்தன் குடியிருக்கும் இடத்திற்கு பின்புறம் ஆனந்தன் புதிதாக கூரை வீடு அமைத்தார் என்றால் சரியல்ல. என் கணவர் இருக்கும்போதே அவரால் அமைக்கப்பட்டது. அந்த கூரை வீட்டினை வாடகைக்கு ஆனந்தன் தான் விட்டு வந்தார் என்றால் சரிதான். அழகப்பன் கீழ் பாதியை பராமரித்தும், மேல் பாதியை ஆனந்தன் பராமரித்தும் வந்தார் என்றால் சரிதான். கடந்த 15 வருடங்களாக இந்த அமைப்பில் பராமரித்து வருகிறார்கள் என்றால் 2014 முதல் தான் இதன்படி அனுபவதித்து வருகிறார்கள். பெரிய மாரிம்மன்கோவில் தெருவில் உள்ள இடம் ஊழியமனையும், பகுதிமனையும் சேர்ந்து உள்ளதா என்றால் பகுதி மனை மட்டும் தான் உள்ளது. பெரிய மாரியம்மன் கோவில் தெருவில் உள்ள இடம் சுமார் 7700 சதுரடி உள்ளதா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

பெரிய மாரிம்மன்கோவில் தெருவில் உள்ள இடத்திற்கு உள்ள நான்கெல்லையை வைத்து பார்த்தால் பகுதி மனை மற்றும் ஊழிய மனையும் சேர்ந்து வரும் என்றால் பகுதி மனை மட்டும் தான் வரும். பெரிய மாரியம்மன்கோவில் தெருவில் உள்ள இடத்தை எவ்வாறு பிரித்துக்கொண்டீர்கள் என்றால் நாங்கள் பிரித்துக்கொள்ள வில்லை. அவர் அவர் வேலி வைத்து அடைத்து தனித்தனியாக அனுபவித்து வருகிறார்கள்.

அந்த இடத்தின் முன்பக்கத்தில் கண்ணகி வேலிவைத்து அடைத்து வசித்து வருகிறார். அதன் பின்புறத்தில் அழகப்பன், அதன் பின்புறம் ஆனந்தன் பின்னர் தவமணி ஆகியோர் பிரித்துக்கொண்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. அவரவர்கள் பிரித்து அனுபவித்து வருகிறார்கள். எனது மகள் கண்ணகி கிருஸ்தவ மதத்திற்கு மாறியுள்ளாரா என்றால் இல்லை. மேற்படி சொத்துக்கள் அனைத்தும் 15 வருடத்திற்கு முன்பே பிரித்து அவரவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அதனை மறைத்து எனது மகள் கூறியதற்கு ஆதரவாக அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தனியாக வழக்கறிஞர் வைக்கவில்லை என்றால் சரியல்ல. எனது தரப்பு வழக்கறிஞர் சிவபுண்ணியம் ஆவார். எனது மகள் கோரியுள்ள பாகவியாஜியம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.